சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.19.11.2024
O.S.No. 4/2022
PW 2 : அர்ச்சுணன் (வயது 59 ) த/பெ. சுந்தரமூர்த்தி
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>பிரதிவாதி தரப்பு கு.வி</u>

வாதி கூலி தொழிலாளி என்றால் சரிதான். எனக்கு சொந்த ஊர் இலால்குடி அருகில் உள்ள நன்னிமங்கலம் கிராமம். பிரதிவாதியின் மகள் திருமணத்திற்காக பணம் வாங்கியதாக நான் கூறியுள்ளேன் என்றும் எந்த தேதியில் பிரதிவாதியின் மகளுக்கு திருமணம் நடந்தது என்றால் தெரியாது. புரோ நோட்டை யார் எழுதினார் என்றால் கணேசன் ( பிரதிவாதி) புரோநோட்டை எழுதி கொண்டு வந்தார். திருமங்கலத்தில் உள்ள தங்கராசு வீட்டில் வைத்து பிரதிவாதி பணம் வாங்கினார். நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் செய்வேன். பிரதிவாதி கையில் வைத்திருந்த பேனாவில் நான் கையொப்பம் செய்தேன். அவர் பால்பாய்ண்ட் பேனா வைத்திருந்தார் என்று நினைக்கிறேன். என்னிடம் காட்டப்படும் புரோநோட்டில் உள்ள எனது சாட்சி கையெழுத்து இங்க் பேனாவினால் போடப்பட்டதா அல்லது பால்பாய்ண்ட் போனாவால் போடப்பட்டதா என்றால் இங்க் பேனாவினால் போடப்பட்டதாக தெரிகிறது. புரோநோட்டில் எழுதியவரின் பெயராக கணேசன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது பெயர் அர்ச்சுணன். எனது தகப்பனார் பெயர் சுந்தரமூர்த்தி. நான் கூறுவதுபோல் புரோநோட் எழுதியதாக கூறும் தேதியன்று நான் அந்த இடத்தில் இல்லவே இல்லை என்றால் சரியல்ல. முருகேசன் கூலி தொழிலாளி. அவர் கணேசனுக்கு கூலி வேலை செய்தார். முருகேசன் புரோநோட்டில் கையொப்பம் செய்யவில்லை என்றும், பின்னிட்டு புரோநோட்டில் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புரோநோட்டில் குறிப்பிட்ட தேதியில் பிரதிவாதி பணம் பெறவில்லை என்றும் அதற்காக புரோநோட்டில் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்றும் சாட்சி கையெழுத்து அன்றைய தேதியில் பெறப்படவில்லை என்றும் கூறினால் சரியல்ல. வாதி நிரப்பப்படாத புரோநோட்டில் பிரதிவாதியின் கையொப்பம் பெற்று, பின்னிட்டு

மோசடியாக அதனை பயன்படுத்தி புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளார் என்றும் அதற்கு உடந்தையாக நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பணம் வாங்கியபோது நான் பிரதிவாதியின் வீட்டில் இருந்தேன். பிரதிவாதியின் மைத்துனர் நான். தங்கராசு திருமங்கலத்தை சேர்ந்தவர், கணேசன் பின்னவாசல் புதுத்தெருவை சேர்ந்தவர். மேற்படி இரண்டு ஊருக்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் குறுக்கே சென்றால் 2 கி.மீ. நேராக சென்றால் 3 கி.மீ தொலைவு இருக்கும். எனக்கும் பிரதிவாதிக்குமிடையே உள்ள காழ்புணர்ச்சி காரணமாக நான் பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>நீதிமன்ற கேள்வி</u>

பிரதிவாதி எங்கு வைத்து வாதியிடம் பணம் வாங்கினார் என்றால் வாதியின் வீட்டில் வைத்து பணம் வாங்கினார். நான் அவருடன் உடன் இருந்தேன்.

<u>ம.வி</u> - இல்லை.

/ signed/
அர்ச்சுணன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

R MOHANA

Digitally signed by R MOHANA
Date: 2024.11.19 18:16:27 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி